FILE 03

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 21 புதன்கிழமை (03-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 128

# வலிகாமம் மேற்கு பகுதியில் புலிகளின் பலம் அதிகரிப்பு

## புலனாய்வு அறிக்கை தெரிவிப்பாம்

கொழும்பு, ஏப்ரல் 3

படையினரின் ஆக்கிரமிப்புப் பிரதேசத்துக்குள் அடங்கும் வலிகாமம் மேற்கில் புலிகள் தமது பலத்தை அதிகரித்து வருவதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகவே கடந்த வெள்ளிக்கிழமை படையினரின் தேடி அழிக்கும் நடவடிக்கை வலிகாமத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்றும் —

இதனை பெப்ரவரி 2 ஆம் வாரம் ஆரம்பிக்கவே முதலில் திட்டமிடப்பட்டிருந்ததாகவும்—

ஆனால் இதனை வழி நடத்திச் செல்ல இருந்த சிரேஷ்ட ராணுவ அதிகாரிகளில் ஒருவர் கொழும்பில் நீதிமன்ற விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டி இருந்ததால் அது பிற்போடப்பட்டு கடந்த வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்டது என்றும் — கொழும்பில் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆக உயர்வு

கொழும்பு, ஏப். 3

கடந்த 23 ஆம் திகதி வந்தாறு மூலையில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் உயிரிழந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் நடமாட அஞ்சும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி

### பெரும் பகுதி வெறிச்சோடிகிடக்கிறது

யாழ்ப்பாணத்தில் ராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ். போதனா வைத்திய சாலையில் வெளி நோயாளர் பிரிவும், பெண் நோயாளர்கள் வார்ட்டும் மட்டுமே இயங்குகின்றன. ஏனையவை வெறிச்சோடிக் கிடக்கின்றன.

இதனால் அப்பகுதியில் படையினர் கூட நடமாட அஞ்சுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இப்படியான நிலையில் கொழும்பில் இருந்து வைத்தியர்களோ அல்லது ஊழியர்களோ அங்கு சென்று கடமையாற்றுவது சாத்தியப்படமாட்டாது என்று சுகாதார அமைச்சுக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாம். (இ)

# ஹெலி, ஷெல், பீரங்கி தாக்குதல்களால் வடமராட்சிப் பகுதியில் பெரும் பதற்றம்

## இருவர் காயமடைந்தனர்

வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம்இரவு இடம்பெற்ற ஹெலி, ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களின் போது இருவர் காயமடைந்தனர். சில வீடுகள், பயன்தரு மரங்கள் சேதமடைந்தன.

இரவு 7-40 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் இருந்து எழும்பிய ஹெலிக்கொப்டர் ஒன்று வல்லை, தொண்டமானாறு பகுதியை வட்டமிட்டு றொக்கட் லோஞ்சர் தாக்குதலை மேற்கொண்டது.

வானமே இடிந்து விழுவது போன்ற பெரும் பயங்கரச் சத்தத்துடன் நெருப்புக் கோளங்களாக றொக்கட் குண்டுகள் வெளியேறி வெடித்தன.

றொக்கட் குண்டுவீச்சுக்கள் நடந்த இடமெல்லாம் தீப்பற்றி எரிந்த வண்ணமிருந்தன. இக் குண்டுகளின் சிதறல்கள் சுமார் 3, 4 மைல்களுக்கு பறந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

ஒரு தடவையில் ஆறு ஏழு குண்டுகள் வீதம் நான்கு தடவைகள் றொக்கட் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பகுதியில் இருந்து பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல்கள் உடுப்பிட்டி புறாப்பொறுக்கி ஆலடிப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன.

இத்தாக்குதல் சம்பவங்களின் போது புறாப்பொறுக்கிப்பகுதியில் செல்லர் அம்பிகைபாலன் (வயது 50) நா. நவரத்தினம் (வயது 45) ஆகிய இருவரும் காயமடைந்தனர்,

காயமடைந்தவர்களில் அம்பிகைபாலன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-173-15-90)

## ஆனமடுவ பகுதியில் தாக்குதல் தொடர்கிறது

குருநாகல் மாவட்டத்தில் ஆனமடுவப் பகுதியில் அரச எதிர்க்கட்சி ஆதரவாளர்களிடையே தாக்குதல் சம்பவங்கள் தொடர்வதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் அப்பகுதியில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து நேற்றும் மோதல்கள் இடம்பெற்றதாகவும்— கல்வீச்சுக்களும், துப்பாக்கிச் சூடுகளும் இடம்பெற்றதாகவும்—

குருநாகல் நகர பிதா உட்பட நான்கு ஐ.தே.க. ஆதரவாளர்கள் காயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கண்டித்துள்ளார். (இ-3-7)

## இராணுவத்துக்கென திரட்டப்பட்ட 10 ஆயிரம் பேரில் 6 ஆயிரம் பேரே வந்தனர்

கொழும்பு, ஏப். 3

வலிகாமத்தில் சூரியப்பிரகாசம் ராணுவ நடவடிக்கை முடிவடைந்த கையோடு பத்தாயிரம் பேரை படையில் சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றதல்லவா?

அந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 10 ஆயிரம் பேரில் 6 ஆயிரம் பேர் மட்டுமே பயிற்சிக்கு சமுகமளித்திருந்தனர் என்றும்—

மிகுதி 4 ஆயிரம் பேரும் வரவில்லை என்றும் ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

4 ஆரயிம் பேர் பயிற்சிக்கு வராததாலேயே கடந்த மாத இறுதியில் மீண்டும் 10 ஆயிரம் பேரைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது என்றும்—

குறைந்தது 8 ஆயிரம் பேரையாவது இம்முறை சேர்க்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ராணுவ தலைமையகம் கருதுகிறது என்றும்— "த ஐலண்ட்" மேலும் தெரிவிக்கிறது.

# மூப்பனார் தலைமையிலான அணி மாநிலக் கட்சியாக அங்கீகாரம்

சென்னை. ஏப். 3

இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து கருப்பையா மூப்பனார் தலைமையில் பிரிந்து சென்றிருக்கும் அணியை மாநிலக் கட்சியாக இந்திய தேர்தல் ஆணையகம் அங்கிகரித்துள்ளது.

"தமிழக மாநில காங்கிரஸ் (மூப்பனார் பிரிவு)" என்ற பெயரில் அங்கிகரிக்கப்பட்டுள்ள இக்கட்சிக்கு "சைக்கிள்" சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சி போட்டியிட விருக்கும் 29 நாடாளுமன்றத் தொகுதிகளில் 27 தொகுதிகளின் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அமைச்சர்களான ப. சிதம்பரம், அருணாசலம் ஆகியோரின் பெயர்கள் இப்பட்டியலில் இல்லை. அவர்கள் இருவரும் மூப்பனார் அணியில் இணைந்து போட்டியிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

தி.மு.க. தலைவர் கருணாநிதி சென்னை சேப்பாக்கம் தொகுதியிலும் அவரது மகன் ஸ்ராலின் ஆயிரம் விளக்குத் தொகுதியிலும், அவரது மருமகன் முரசொலிமாறன் தென் சென்னையிலும், தி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மை பலம் எக்கட்சிக்கும் கிடையாது

### கருத்துக் கணிப்பு கூறுகிறது

புதுடில்லி, ஏப். 3

இந்தியாவில் இம்மாத இறுதியில் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காது என்று நேற்று வெளியிடப்பட்டுள்ள கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய அந்தக் கருத்துக் கணிப்பை "அவிட் லுக்" எனும் ஆங்கில சஞ்சிகை வெளியிட்டது.

அதன்படி காங்கிரஸ் ஆட்சி பெரும்பான்மையை இழக்கும் என்றும், 537 நாடாளுமன்றத் தொகுதிகளில் அக்கட்சிக்கு 191 இடங்களே கிடைக்கும் எனவும் அக்கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

பாரதிய ஜனதாக் கட்சிக்கு 170 இடங்களும், தேசிய முன்னணிக் கூட்டணிக்கு 139 இடங்களும் கிடைக்கும் என்றும் அது தெரிவித்தது.

15 முக்கிய மாநிலங்களில் சுமார் 15 ஆயிரம் வாக்காளர்களிடம் இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

# அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் அமுல்?

கொழும்பு, ஏப். 3

நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஜூன் மாதத்துக்கு முன்னதாக நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களைக் காலவரையறையின்றி ஒத்திப்போட அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக தேர்தல் ஆணையாளர் திணைக்கள வட்டாரங்களை ஆதாரங்காட்டி "லக்பிம" சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வேலையில்லாப்பிரச்சினை, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, பொருள்களின் விலையேற்றம், பால் மா விலையேற்றம், கிழக்கில் போராளிகளின் கை ஓங்கியுள்ளமை, சூரியப்பிரகாசம் நடவடிக்கையினால் உரிய பலன் கிடைக்காமை, மாகாண சபைகளைக் கலைத்தது சட்டவிரோதமானது

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**ST. JOHN'S COLLEGE & CHUNDIKULI GIRLS' COLLEGE**

இரு பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரும் எதிர்வரும் வியாழக்கிழமை (04-04-96) காலை 11-00 மணிக்கு கலிகைச் சந்தி, கரவெட்டி எனும் விலாசத்தில் அமைந்துள்ள திருமதி இராஜதேவன் (கணக்காளர்) அவர்களின் இல்லத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

S. தனபாலன்,
அதிபர்.

(41294)

---

## நோயாளர் கவனத்துக்கு

கொழும்பில் மேலதிக சிகிச்சைக்காக 2 ஆவது கப்பலில் செல்ல பெயர்களைப் பதிவு செய்தவர்களை இன்று காலை 9 மணிக்கு மந்திகையில் உள்ள போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

---

## இடமாற்றம்

சாவகச்சேரி பஸ்நிலையம் அருகில் இயங்கி வந்த வைத்திய நிலையம் இன்று புதன்கிழமை (03-04-96) தொடக்கம் சாவகச்சேரி இலங்கை வங்கி கிளை அருகில் இயங்கும் என்பதை நோயாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

குறிப்பு:-

1. இரத்தப்பரிசோதனைகள் செய்யப்படும்.
2. ஈ. சி. ஜி (ECG) செய்யப்படும்.

டாக்டர் S. சிவானந்தராஜா
M. B. B. S (cey) (41321)

---

## தேவை

அனுபவம் வாய்ந்த மின் தொழில் நுட்பவியலாளர் (Electrician) தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல. 540
C/o உதயன்
சரசாலை,
சாவகச்சேரி.

---

## லக்கி கல்வி நிலையம்

அளவெட்டி, சுன்னாகம்.

ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான வகுப்புகள் மீண்டும் 05-04-96 இல் இருந்து ஆரம்பமாகின்றது.

இடம்:- கண்டி வீதி, இல. 24, சேர்ச் லேன், நுணாவில்.

★ பழைய, புதிய மாணவர்கள் அனைவரும் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

நிர்வாகி

(41297)

---

## I.A.S. - கமல் அக்கடமி

ஆவரங்கால், அச்சுவேலி.

ஆகிய கல்வி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சேவை. மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில்.

ஆண்டு 5 - 11 வரையான வகுப்புகளும் O/L DAY CLASS வகுப்புகளும் நடைபெறும்

ஆரம்பம்: **05 - 04 - 1996**
மாலை 3.00 மணி

(41292)

---

## தேவை

நல்ல நிலையிலுள்ள அலுவலகத் தேவைக்கு பயன்படுத்தக் கூடிய மேசைகள், கதிரைகள் தேவை.

தொடர்பு:
உதயன் பணிமனை,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி,

---

## எக்சலன்ற் கல்வி நிலையம்

(புத்தூர் சந்திக்கு அருகாமை)
கண்டி வீதி, மீசாலை

முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் ஆண்டு 6 முதல் O/L 96, O/L 95, DAY CLASS வரை

ஆரம்பம்: 03-04-1996 புதன் மாலை 3-00

| | | |
|---|---|---|
| கணிதம் | — | நா. கேதீஸ்வரன், V. வதனதாசன் |
| விஞ்ஞானம் | — | S. லலீசன், கி. ஈசன் |
| ஆங்கிலம் | — | S. S. சர்மா |
| சமூகக்கல்வி | — | S. கிருஷ்ணன், Y. நாகநாதன், ஜெயதாஸ், ச. நந்தகுமார் |
| தமிழ் | — | K. ஈஸ்வரன், A. ஆர்த்திகன், T. றஜனா |
| வர்த்தகம் | — | S. சிவானந்தம் |
| சித்திரம் | — | N. ராஜன் |

★ கணிதத்தில் சித்தியடையத் தவறியவர்களுக்கு விசேட மீட்டல் வகுப்புக்கள் ★

அனுமதிகளை இன்று காலை 8-00 மணியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (41319)

---

## தேவை

தளபாடங்கள் செய்வதற்கு பாவிக்கக்கூடிய நல்ல மரங்கள், பலகைகள் தேவை. வைத்திருப்பவர்கள் தொடர்புகொள்ளவும்.

உதயன் பணிமனை,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

---

SPOKEN ENGLISH WIth GRAMMAR By **BRITTO**

## புதிய பிரிவு

ஆரம்பம்
06 - 04 - 96 சனி
காலை 7 - 9 மணி

## சிவாகி கல்வி நிலையம்

சாவகச்சேரி

(41318)

---

## ஐடியல் கல்வி நிலையம்

நீர்வேலி
(கனகம்புளியடி - மட்டுவில் வீதி பிரதான சந்தை அருகில்)

★ யாழ். நகர் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் 96, 97 கலை, வர்த்தக வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| கணக்கியல், தமிழ் | ] | வேல்நம்பி |
| பொருளியல் | — | இராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — | பசில் |
| புள்ளி விவரவியம் | — | திரிகரன் |
| நாடகமும் அரங்கியலும் | — | அகிலன் |
| இந்து நாகரீகம் | — | நித்தியானந்தன் |
| இந்து சமயம் | — | திருமதி முகுந்தன் |
| அளவையியல் | — | ஜெயராஜ் |
| புவியியல் | — | ஜெயா |

ஆண்டு 5 முதல் O/L வரையான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

### G.C.E. O/L

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரிகரன், செல்லத்துரை |
| விஞ்ஞானம் | — | வாமன், ஈசன், சபேஷன் |
| தமிழ் | — | வேல்நம்பி, திருமதி முகுந்தன் |
| சமூகக்கல்வி | — | நித்தியானந்தன், அன்ரன் |
| ஆங்கிலம் | — | தவராசா, போல் |
| வர்த்தகம் | — | வேல்நம்பி |
| சமயம் | — | நித்தியானந்தன், திருமதி முகுந்தன் |

(41295) — நிர்வாகி

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் பங்குனி மாதம் 22ம் நாள் (04-04-1996) வியாழக்கிழமை காலை 10-00மணிதொடக்கம் 11-30 மணி வரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில்

திரு. திருமதி நித்தியானந்தவேல் தம்பதிகளின் திருநிறைசெல்வன்

**கிருபானந்தமூர்த்தி**
(இலங்கை மின்சார சபை, தலைமைக் காரியாலயம், கொழும்பு)
அவர்களுக்கும்

திரு. திருமதி இரத்தினம் தம்பதிகளின் திருநிறைசெல்வி

**காஞ்சனா**
(கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

மணமகன் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி க. நித்தியானந்தவேல்
செம்பாடு, பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி இரத்தினம்
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (41293)

---

## A/L 96, 97, 96 மீட்டல்

ஆரம்பம்: **3 - 4 - 96** 3 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | மகேந்திரன் |
| வர்த்தகம் | — | பசில் |
| கணக்கியல் | — | வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | R. P. சர்மா |
| புவியியல் | — | குணராசா |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துசமயம், இந்துநாகரிகம் | ] | அருள்நங்கை |
| அரசியல் | — | கியூபேட் |
| நாடகமும் அரங்கியலும் | ] | குழந்தை சண்முகலிங்கம், நுசாங்கன் |
| கிறீஸ்தவம் | — | மல்லிகா |
| வரலாறு | — | ஆனந்தராஜா |
| புள்ளிவிவரவியல் | — | ராஜன் |

**SPOKEN ENGLISH WITH GRAMMAR BY BRITTO**

ஆரம்பம்: 6 - 4 - 96 (9 மணி)

## புதிய உயர் கல்லூரி

(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
விநாசித்தம்பி லேன், சாவகச்சேரி.

(41325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைக்கேணித் தாக்குதலில் படையினர் சிறைப் பிடிக்கப்பட்டனர்?

கொழும்பு, ஏப். 3

கடந்த சனிக்கிழமை நண்பகல் வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட ''டோறா'' படகில் இருந்த கடற்படையினரில் பெரும் பகுதியினர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கலாம்.

பாதுகாப்பு வட்டாரங்களுக்கு இது வரை கிடைத்த தகவல்கள் இவ்வாறு தெரிவிப்பதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இரு கடற்படை அதிகாரிகள் உட்பட 14 படையினர் உயிரிழந்ததாக முதலில் தகவல்கள் வெளியானது தெரிந்ததே.

அவர்களில் அதிகமானோரே கடற்புலிகளிடம் சிக்கியிருக்கலாம் என தற்போது கருதப்படுகின்றதாம்.

லெப்டினன்ட் விஜேதுங்க, சப் லெப்டினன்ட் குணவர்த்தன ஆகியோரே காணாமல் போன இரு அதிகாரிகளாவர்.

மேற்படி டோறா படகிலிருந்து கடலில் பாய்ந்த கடற்படையினர் மீது கடற்புலிகள் வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் கூறப்பட்டது.

# கடற் புலிகளினால் கடும் அச்சுறுத்தல்

கொழும்பு. ஏப். 3

திருகோணமலைக்கு வடக்கு பகுதியிலிருந்து வெற்றிலைக்கேணி வரையுள்ள பிரதேசத்தில் கடற்புலிகளின் அணிகள் நிலைகொண்டிருப்பது — வடபகுதிக்கான — இராணுவ ஆளணி, ஆயுத தளபாட — விநியோகத்துக்கான தரை, கடல் வழிப் பாதைகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது

பாதுகாப்பு அதிகாரிகள் இவ்வாறு தெரிவிப்பதாக ''த ஐலண்ட்'' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

செம்மலை, அளம்பில் முதல் நாகர்கோவில் வரையான பல பகுதிகளில் இருந்து கடற்புலிகள் இயங்கி வருகின்றனர்.

கடந்த ஜனவரி 19 ஆம் திகதி பிற்பகலில் ஸ்ரீலங்கா விமானப்படையின் ''எம். ஐ. 17'' ரக ஹெலிக்கொப்டர் 39 படையினருடன் வீழ்த்தப்பட்டதும் வெற்றிலைக்கேணி கடற்பிரதேசத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கிற்கான கடல்வழிப் பாதையை பயன்படுத்தக் கூடியதாக திறந்து வைத்திருப்பதற்கு, கிழக்குக் கரையோரங்களில் உள்ள கடற்புலிகளின் நிலைகள் குறித்து அரசு திடமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ)

# சுந்தரின் படைப்புகள் தமிழர் வரலாற்றுப் பதிவு

சிரித்திரன் சுந்தர் ஒரு தனி மனிதன் மட்டுமல்லர்; ஒரு சமூகத்தின் மனச்சான்று, தமிழர் வரலாற்றின் முக்கிய காலகட்டத்தில் வாழ்ந்து மறைந்த மாமனிதர், மென் உணர்வுகளை மறுதலிக்காத உன்னதமான கலைஞர்.

வாழ்வில் எளிமை; பேச்சில் இனிமை; சிந்தனையில் தெளிவு என்று வாழ்ந்த தற்புகழ்ச்சி பாராட்டாத் தனித்துவமான கீலை இலக்கியவாதி.

தமிழ் பத்திரிகைத்துறையில் நகைச்சுவைக்கு என முதலில் வெளிவந்த இதழ் என்ற பெருமை சிரித்திரனைச் சேரும்.

சமூகப்பழைமையில் துயிலும் தமிழனை மகுடியினால் விழிக்கச்செய்த அறிவுலக மேதை அவர். மகுடியை ஊதுவதற்கு சுந்தர் இனி இல்லை. ஆனால் அது ஏற்படுத்திய அதிர்வலைகள் ஓயப்போவதில்லை.

எண்ணங்களை வண்ணங்களில் கரைத்து ஓவியங்கள் பல தந்த இவர், மக்கள் மனங்களில் அழியா ஓவியமாகிறார்.

எமது இனம் தேச விடுதலைப் போரை வரித்துக் கொண்டபோது தோள் கொடுத்தார். சுந்தர் என்ற சிந்தனைக் காவியத்தின் முடிவுரை எழுதப்பட்டுவிட்டது. ஆனால் அவர் படைத்துச் சென்ற உயிரோவியங்களில் அவர் வாழ்ந்து கொண்டிருப்பார்.

சிந்தையைத் துளாவி விழிகோதும் அவரது வியத்தகு படைப்புகள் தமிழ் இனத்தின் வரலாற்றுப் பதிவுகள். தேசியத்தைப் பாதுகாக்க முற்பட்ட இனத்தின் வரலாற்றில் இவை காலத்தால் அழியாதவை.

பல்லாயிரம் தமிழ் உள்ளங்களைப் புன்னகையில் மலரச் செய்த தூரிகையின் வேந்தன் இன்று அமைதியாகத் துயில்கிறார். ஆனாலும் அவரது சிந்தனை வீச்சு எங்களோடும் எங்களுக்குள்ளும் உயிரோட்டமாக வாழ்ந்து கொண்டே இருக்கும்.

— கவியமுதன்

[சிரித்திரன் சுந்தர் — சி. சிவஞானசுந்தரம் அவர்கள் மறைந்து ஒரு மாதமாகிறது. அதனையொட்டிய நினைவுப் பதிவு இது.]


மானிப்பாயில் தனித்துவமாக இயங்கிவந்த
**BITSMANS**
கல்விநிறுவனம்
நெல்லியடியில் சயன்ஸ் அக்கடமி நிறுவனத்திலும்
பருத்தித்துறையில் N.C.A. கல்விநிறுவனத்திலும்
ஆண்டு 5 முதல் 11 வரை A/L கலை, வர்த்தகம்
எமது வழமையான ஆசிரிய குழுவினால்
ஆரம்பம்: 3-4-96 புதன் மாலை 3.00 மணி
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By. M. A. HARI B.A., DIP. IN ENG.
ஆரம்பம்: 4-4-96 வியாழன் 9.00 மணி
(40408)



## ஞானோதய அக்கடமி
கண்டி வீதி, சாவகச்சேரி.
(சோழன் நெல் அரிசி, வாணிபம் முன்பாக)
**A/L 96, 97 கலை வர்த்தகம்**
பொருளியல்:- திரு. உதயன்
கணக்கியல்:- திரு. ஸ்ரீ
வர்த்தகம்:- திரு. பசில்
புள்ளிவிவரவியல்:- / அளவையியல்:- ] திரு. S.S. மனோகரன்
தமிழ்:- திருமதி அ. மீரா
இந்துநாகரீகம்:- / இந்துசமயம்:- ] திரு. பாலா
புவியியல்:- திரு. வேலா
அரசியல்:- திரு பஞ்சு
நாடகமும், அரங்கியலும்:- திரு. ஸ்ரீகந்தவேள்.
ஆரம்பம்: இன்று பி. ப. 3 மணி
★ A/L 96 DAY CLASS ★
(A/L 95 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
ஆரம்பம்: இன்று காலை 8 மணி
குறிப்பு:
★ 200 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
★ அனுமதியை உடன் உறுதிப்படுத்தவும்.
(41305)



யாழ்.
## கலை வர்த்தக கல்லூரி
C. C. A.
A/L 96, 97, 96 மீட்டல்
ஆரம்பம் இன்று 03 — 04 — 1996
புதன்கிழமை பி. ப 3. 00 மணி
குறிப்பு:-
பொருளியல் ஆசிரியர் திரு. கு. உதயன் அவர்களால் 96 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு புதன்கிழமை பி. ப. 3. 00 மணிக்கும் 97 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு 4. 00 மணிக்கும் மாணவர் நலன் கருதிய நேர அட்டவணை நிறுவனத்தில் வைத்து சமர்ப்பிக்கப்படும்.
நிர்வாகம்.
[41137]


## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஊசி மருந்துகள்

சாவகச்சேரி, ஏப் 3

சாவகச்சேரி வைத்திய சாலைக்கு ஓரளவு ஏற்புத்தடை ஊசி மருந்து மற்றும் ஏ. ஆர். வி. என்று அழைக்கப்படும் விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து ஆகியவை வந்து சேர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு ஊசி மருந்துகளுக்கும் கடந்த காலங்களில் இந்த ஆஸ்பத்திரியில் பற்றாக்குறை நிலவி வந்தது தெரிந்ததே. [இ-13]

## விண்ணப்பம்

மந்திகை, ஏப். 3

மாணவ குடும்ப நல சேவையாளர்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொடர்ந்து 3 வருடங்கள் குடும்ப நல சேவையில் கடமையாற்றியவர்களிடம் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. [இ-15]

## புத்தாண்டுக்கு முன்னரா? பின்னரா?

மணிலா, ஏப் 3

குடாநாடு மீதான இரண்டாம் கட்ட தாக்குதலுக்கான சகல ஏற்பாடுகளையும் இராணுவம் முடித்து விட்டது.

தாக்குதலை தமிழ் — சிங்கள புத்தாண்டுக்கு முன்னரா அல்லது பின்னரா ஆரம்பிப்பது என்பது குறித்து இராணுவ அதிகாரிகளிடையே விவாதம் நடப்பதாக ... வர்னொருவர் நேற்றுத் தெரிவித்தார். (இ-5)


# NOTICE
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
## DEPARTMENT OF SIDDHA MEDICINE
1st, 2nd, 3rd & 4th BSMS EXAMINATIONS
4th B.S.M.S examination will commence on 15th April, 1996.
1st, 2nd & 3rd B. S. M. S annual examination will commence on 6th May, 1996. Those who have not applied earlier should submit their applications at the Department of Siddha Medicine on or before 19th April 1996.
Registrar. (சி/4159)



## 31-ம் நாள் அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 16 — 02 — 1939
உதிர்வு: 06 — 03 — 1996

**அமரர் கந்தசாமி திருநாவுக்கரசு**
(பிரதம முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு திணைக்களம், இலங்கை வங்கி, தலைமையகம், கொழும்பு).

எமது குடும்பத்தலைவரின் திடீர் மறைவினால் நாம் துயருற்று இருந்த போது எமக்குப் பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், நேரடியாகவும் கடித மூலமும் மற்றும் பல வகைகளிலும் தமது அஞ்சலியையும் அனுதாபத்தையும் துயரையும் தெரிவித்துக் கொண்ட சகலருக்கும், எமது இதயபூர்வமான நன்றியைக் கூறுகிறோம்.

மேலும் 05 - 04 - 96 அன்று எமது தற்போதைய இல்லத்தில் நடைபெறும் 31 ஆவது நாள் நிகழ்வில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காக முருகப் பெருமானைப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு தங்களை மிக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மனைவி, மக்கள்.

தற்போதைய முகவரி:
சோ. மனோகரன்
ஆலங்கேணி,
பூநகரி.
(41290)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன்ஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Vaccume Cleaner; Mercury Bulb Sets; Three Core Wires; 7/16 P. V. C. Cables; Two Ton Puller; Wire rope. தொடர்பு: நவரத்தினம், மட்டுவில் தெற்கு, உபதபாற் கந்தோர் முன் கடை, சாவகச்சேரி. [41314]

## விற்பனையாகிறது

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெற்றிக்கனி இதழ்கள், மாதிரி வினா-விடைகள், அடிப்படை வழி காட்டிகள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தக சாலை, நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி. 41310)

## தேவை

ஹோர்லிக்ஸ், வீவா, ஜாம் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும். சோழன் வெற்றுப்பொருள் வாணிபம், யாழ்சாலை, சாவகச்சேரி. (41274)

## O/L DEC'95

அரசாங்கத்தால் டிசம்பர் 95இல் நடத்தப்பட்ட O/L வினாத்தாள்கள் விடைகளுடன் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். வெளியீடு: Bond, த. பெ. 140, யாழ்ப்பாணம். (41143)

## கல்வி மஞ்சரி G.C.E. O/L

க. பொ. த சாதாரணப் பரீட்சைக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய முன்னோடிப் பயிற்சி நூல் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நவீன சந்தை, சாவகச்சேரி. (41311)

## வெற்றுப் போத்தல்

வெற்று வெள்ளை சாராயப் போத்தல் (முழுப் போத்தல், அரைப் போத்தல்) கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: உணவு எண்ணெய்க் கம்பனி, யாழ். வீதி புளியங்குளம். [41132]

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ். பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறி டிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல்பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும்பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41147)

## உணவுப் பார்சல்கள்

ஜெசித்தாராவின் உணவுப் பார்சல்கள் தினமும் பிற்பகல் 12-00 மணி முதல் 3-00 மணி வரை. உங்களுக்கு அடக்கமான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம். ஜெசித்தாரா, (தேசியசேமிப்பு வங்கி முன் ஒழுங்கை), கண்டி. வீதி, சாவகச்சேரி. (41264)

## தவறிவிட்டது

செல்வராசா தில்லை நாயகி, பூவத்தோட்டம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி முகவரியையுடைய 587042657 V இலக்க அடையாள அட்டை 28-3-96 வியாழக்கிழமை ஒமந்தைக்கும் தாண்டிக்குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (41289)

---

## எம். கே. எஸ். வைத்தியசாலை
## M K S MEDICAL CLINIC

யாழ். குடாநாட்டில்
கே. கே. எஸ் வீதி, 3ம் கட்டை, கொக்குவில்—
கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.
ஆகிய இடங்களில் இயங்கிய மேற்படி ஸ்தாபனம்

**03 — 04 — 1996** புதன் முதல்

**யாழ். வீதி, கிளிநொச்சியில்**
(சிவா வர்த்தக நிலையம் அருகில்)
தனது சேவையை ஆரம்பிக்கின்றது

குறிப்பு: முன் போல் சகலவிதமான மருத்துவ ஆய்வு கூட பரிசோதனைகளும் செய்து கொள்ளலாம்.

டாக்டர் மு. கனகசபை
C. M. C. Reg. No. 1481

(40489)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 04 — 1910

மறைவு: 16 — 03 — 1995

சாவகச்சேரி வடக்கு
**வீரகத்தியார் வல்லிபுரம்**
(கண்ணகை அம்மன்)

திதி: 03 - 04 - 1996

ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு என்றும் மறையவில்லை. உங்கள் நினைவு, பல்லாண்டு காலம் சென்றால் என்ன உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டகலா. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(41316)

---

வடமராட்சியில்
## சதா பொன்ஸ் கல்வி நிறுவனத்தில்
# பொருளியற் கல்லூரி

மாலுசந்தி, நெல்லியடி.

## A/L 96, 97 கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| வர்த்தகம் | — | வரதன் |
| அளவையியல் | — | சயந்தன் |
| வணிகப் புள்ளி விவரவியல் | — | தவசேகர் |

**ஆரம்பம்: 5-4-96** வெள்ளி 3-00 P. M.

## A\L 96 DAY CLASS

**(A/L 95** பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)

**ஆரம்பம்: 5 - 4 - 96** வெள்ளி 8-00A. M.

★ அனுமதிகளை 4 - 4 - 96 இற்கு முன்பாகப் பெற்றுக் கொள்ளவும்.

(41284)

---

# முக்கிய அறிவித்தல்

சேரன் பல்பொருள் வாணிபமாகிய எமது ஸ்தாபனத்தின் நிதியாண்டு **31 - 03 - 96** உடன் முடிவு பெறுவதனால் கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்படுநர்கள் **04-04-96** இற்கு முன்னதாக எம்மைச் சந்தித்து நிலுவைகளை உறுதிப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

| | |
|---|---|
| க. ஜெயகாந்தன் (ஏ. ஜி. எண்ணைக் கடை) | கல்வியங்காடு |
| அன்னராசா களஞ்சியம் | யாழ்ப்பாணம் |
| இராமையா செட்டியார் | யாழ்ப்பாணம் |
| யோகராசா | கோண்டாவில் |
| ராஜ் எரிபொருள் நிலையம் | திருநெல்வேலி |
| சு. பாலகுமாரன் | கந்தர்மடம் |
| பிள்ளையார் களஞ்சியம் | யாழ்ப்பாணம் |
| நியூ வசந்தா களஞ்சியம் | கல்வியங்காடு |
| தீபன் களஞ்சியம் | திருநெல்வேலி |
| ஜெயதுர்க்கா | மானிப்பாய் |
| விநாயகர் களஞ்சியம் | அச்செழு |
| திருப்பதி ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் |
| நாகராஜன் | யாழ்ப்பாணம் |
| சிவஞானம் சிமியோன் | இருபாலை |
| ராஜா களஞ்சியம் | கோண்டாவில் |
| செல்வரட்ணம் (திருப்பதி) | அரியாலை |
| மணியம் களஞ்சியம் | திருநெல்வேலி |
| எஸ். ரீ. ஆர். சன்ஸ் | |
| புஸ்பா களஞ்சியம் | அரியாலை |
| ராஜ்குமார் | ஏழாலை |
| வே. சி. மணியம் | மானிப்பாய் |
| அருள் (ஐங்கரன்) களஞ்சியம் | திருநெல்வேலி |
| செந்தாமரை | யாழ்ப்பாணம் |
| அனுதினம் மருந்தகம் | சின்னக்கடை |
| நல்லை தொழிலகம் | இணுவில் |
| செல்வம் வர்த்தக நிலையம் | அச்செழு |
| எஸ். வி. முருகேசு | யாழ்ப்பாணம் |

பொறுப்பாளர்,
சேரன் பல்பொருள் வாணிபம்

(சி/4158)

---

தென்மராட்சியில்
# பொருளியற் கல்லூரி

ஐயா கடைச் சந்தி, மீசாலை.

**3 — 4 — 96** இல் ஆரம்பமாகவுள்ள பிரிவுகள் அனைத்தும் மாணவர்களால் நிறைந்துவிட்டதனால் **அனுமதிகள் வழங்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைககப்பட்டுள்ளது.** புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக விரைவில் அறிவிப்போம்.

## அனுமதிகள் பெற்ற மாணவர்கள் கவனத்திற்கு

**3 — 4 — 96** புதன்கிழமை பின்வரும் நேர அட்டவணையின்படி வகுப்புகளுக்கு வருகை தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

| நேரம் | DAY CLASS | A/L 96 | A/L 97 |
|---|---|---|---|
| 3 - 00 — 4 - 00 | ECO | COM | ACC |
| 4 - 00 — 5 - 00 | ACC | ECO | COM |
| 5 - 00 — 6 - 00 | COM | ACC | ECO |

(41285)

---

## 10 ஆவது நினைவஞ்சலி



மறைவு: 25 — 03 — 1986

திதி: 03 — 04 — 1996

**அமரர் மு. சி. கனகரத்தினம்**
(ஆசிரியர்)

உங்கள் ஆத்மா சாந்தியாடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர்.

(41237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சீமாட்டியின் சினம்....!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று கூறி, அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள சட்ட ஆவணத்தில் சமஷ்டி முறை அறிமுகப் படுத்தப்படவில்லை. இது அந்த ஆவணத்தின் பெரும் குறைபாடாகும் —

சமஷ்டி முறையின் முக்கிய அம்சங்களில் ஒன்று தானும் அந்த ஆவணத்தில் இல்லை. அதனால் அது மிகவும் பலவீனமானது —

இவ்வாறு அரசாங்க சார்புப் பத்திரிகையான 'சண்டே ஒப்சேவ'ருக்கு வழங்கிய செவ்வியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றொகான் எதிரிசிங்கா என்பவர் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி முறையில் அமையாத தீர்வு — வெறும் அதிகாரப் பரவல் — நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க உதவப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்,

நாடு பிளவுபடாமல் தடுக்க வேண்டுமெனில், போர் தொடர்ந்து பேரழிவுகளும் தொடரும் நிலை நீங்க வேண்டுமெனில், சமஷ்டி முறையை அறிமுகப்படுத்துவது அவசியம் என்று அவர் வலியுறுத்தி உள்ளார்.

இந்தக் கருத்து அடிக்கடி கேட்டுப் புளித்துப்போன ஒன்று தான். தெற்கின் புத்திஜீவிகள் சிலர் சமஷ்டி அரச முறை குறித்து காலத்துக்குக் காலம் ஆதரித்துக் கருத்து வெளியிடுவது வழக்கம்.

ஆனால் இது. சிங்கள தேசத்துப் பேரினவாதிகளுக்கு வேம்பாகக் கசக்கும் ஒன்று. அதனால் ...

நியாயமான முறையில் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் கூறிப் பதவிக்கு வந்த சந்திரிகாவின் சட்ட ஆவணத்தில், சமஷ்டியின் வாடை மருந்துக்கும் இல்லை.

அத்தகைய அர்த்தமற்ற, உப்புச்சப்பற்ற தீர்வுத் திட்டத்தை தமிழர்கள் ஆதரிக்கவில்லை என்றும், மௌனம் சாதிக்கிறார்கள் என்றும் ஜனாதிபதி வேறு சாடி வருகிறார்.

குறிப்பாக கொழும்புத் தமிழ்க் கட்சிகள் மீதும், அங்கு வாழும் தமிழ்ப் பிரமுகர்கள் மீதும் கடிந்து கனல் கக்குகிறார்.

யானைப் பசிக்கு சோளப் பொரி கூட வழங்க மல்மின்றி, 'பச்சைத்' தண்ணீரிம் பலகாரம் சுட்டு முடிக்குன முயற்சியில் தாம் ஈடுபட்டுக் கொண்டு–

அதற்குத் தமிழர்கள் ஒத்தாசை புரியவில்லை என்று பாம்பாகச் சீறுகிறார்!

நாடு பிளவுபடாமல் தடுக்க வேண்டுமா? அதற்கு ஆகக் குறைந்தது சமஷ்டி அரச முறையாவது தேவை; அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஒத்துழையுங்கள்; என்று சிங்களவருக்கு இடித்துரைக்க முடியாத தமது இயலாமையை மறைத்துக் கொண்டு—

இழகிய இரும்பைக் கண்டால் துள்ளித் துள்ளி அடிக்கும் தொழிலாளி போல —

கொழும்புத் தமிழ் அரசியல் வாதிகள் மீதும் அங்கு வாழும் தமிழர் மீதும் சினங் கொள்கிறார்.

இந்தப் பக்கத்திலோ—

சந்திரிகாவின் சட்ட ஆவணத்தை முற்றாக நிராகரிப்பதாக வெளிப்படையாகச் சொல்லும் துணிவு கொழும்புத் தமிழ்த் தலைவர்களுக்கு இல்லை. அதனால் சீமாட்டியின் சினத்தை தாங்கிக் கொள்ளும் அடியாள் போல இவர்கள்...

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 3 ஆம் திகதி, நாளை 4 ஆம் திகதி ஆகிய நாள்களில் காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ கெங்காதாரம் நடராஜா — மே/பா பத்மா ஜெயதேவன் [பென்சனியர் குமாரசாமி வீடு] மட்டுவில் வடக்கு.

★ புவனேஸ்வரி குமாரசாமி — நுணாவில் சந்தி.

★ ரட்ணம் முருகதாஸ் — மட்டுவில் வடக்கு.

★ நாகேந்திரன் நவரட்ணம் — புதிரார் கோவிலடி உரும்பிராய் கிழக்கு, தற்போது-பளை.

★ பேரம்பலம் தங்கராசா மட்டுவில், சாவகச்சேரி (ஏழாலை மத்தி)

★ சரோஜினிதேவி ரேலாரன்ஸ்—மே/பா சிறிகாந்தரூபன் மோட்டார் நுணாவில் மேற்கு,

★சின்னவன் பொன்னையா — கைதடி தெற்கு

★ ரதியம்மா துரைராஜா — மே/பா பதஞ்சலிங்கநாதன் தனலட்சுமி, 99. இரத்தினபுரம் முகமாலை.

★ செல்லத்துரை சுப்பிரமணியம்—மே/பா S. தேவராஜா, கல்வயல்.

★ நல்லதம்பி கணேசபிள்ளை — மே/பா P, நடேசபிள்ளை, பாலா ஸ்ரோர்ஸ், மட்டுவில் தெற்கு.

★ அப்பையா குணரட்ணம் — மே / பா M. பொன்னுத்துரை ரமேஸ்வரன் வீதி, மீசாலை தெற்கு.

★ நகுலேஸ்வரி நாகராசா — கைதடி கிழக்கு,

★ ராசையா மதியரெட்ணம் — மே/பா வீ. ஜெயசிங்கம் 'வெண்ணிலா' கச்சாய் றோட், பெரிய மாவடி

★ சின்னத்துரை சண்முகநாதன் — 95 இந்திரா நகர், முகமாலை.

★ அப்பையா சிவப்பிரகாசம் — மே/பா சி. சக்திகிரீவன், கைதடி.

★ ஏரப்பு சிவஞானம் — நுணாவில் வீதி, சாவகச்சேரி.

★ பிலிப்பு மரிய செபமாலையம்மா — மே / பா பிலிப்பு நேசம்மா, தவசிக்குளம், மிருசுவில்.

★ கிருஷ்ணபிள்ளை லக்சுமி — மே/பா V. P. V ஆனந்தநாதன், சிறிவள்ளி வாசா, மட்டுவில் தெற்கு,

★ சின்னத்தம்பி அப்புத்துரை — மே/பா ராமலிங்கம் சரஸ்வதி, அம்மன் கோவில் வீதி, சரசாலை வடக்கு.

★ நாகலிங்கம் சுந்தரலிங்கம்—சாந்தி ரெக்ஸ்ரைல், கண்டிவீதி, சாவகச்சேரி.

★ குமாரசூரியா பார்த்தசாரதி — மே/பா பாலகிருஷ்ணன், கிருஷ்ணபவனம் சாவகச்சேரி.

★ புனிதவதி S. K. நாதன் (இணுவில்) — மே/பா S. K. சுப்பிரமணியம், வீரக்கொடியான் வீதி, நுணாவில் சந்தி.

★ R. அன்னமேரி — மே/பா. யோன்பிள்ளை, சக்கோட்டை, அல்வாய் வடக்கு.

★ ஆறுமுகம் சுந்தரலிங்கம் — கண்ணகை அம்மன் கோவிலடி, நுணாவில் மேற்கு,

★ கதிரவன் சுமதி — கைதடி மேற்கு.

★ பரமேஸ்வரி நவரட்ணம் — கைதடி வடக்கு, (யாழ்ப்பாணம்)

★ நிர்மலாதேவி சின்னத்துரை—மட்டுவில் மேற்கு, (அச்சுவேலி)

★ நல்லையா நவரத்தினம் — ஐயனார் கோவிலடி, கொடிகாமம்.

★ மரியதாஸ் செலஸ்ரீன் அல்லது அ. ராயரெட்ணம் — புலோப்பளை கிழக்கு.

★ கனகர் முருகையா — வேளாளம் பள்ளம், மிருசுவில்.

★ செல்லையா யோகலிங்கம் — மே/பா கணபதிப்பிள்ளை, நுணாவில் சந்தி.

★ பொன்னுத்துரை செல்வமணி — மட்டுவில் கிழக்கு, (அச்சுவேலி)

★ மகேஸ்வரி இராசரத்தினம் — மே/பா. நா. செல்வக்குமார், கைதடி தெற்கு.

★ சின்னத்தம்பி குமாரசாமி — மே/பா கனகரட்ணம், மீசாலை தெற்கு.

★ மனுவல் யேக்கப் — ஆரோக்கிய மாதா அகதி முகாம், கண்டி வீதி, முகமாலை.

★ தவசி பிள்ளையார் — ராமாவில், மீசாலை வடக்கு.

★ நாகலிங்கம் பொன்னுத்துரை — தூரிக்காடு ஒழுங்கை, மட்டுவில் தெற்கு.

★ தியாகராசா சண்முகராசா — மட்டுவில்.

★ முத்து பரமலிங்கம் — மே/பா க. சிவபாதம், சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி.

★ தங்கராசா பாலச்சந்திரன் அல்லது பாக்கியம்—மே/பா கதிர்காமு கந்தையா, உசன், விடத்தல் பளை வீதி, மிருசுவில்.

★ சிவலை இராசு — மே/பா S கந்தசாமி G. S ஒழுங்கை, எருவன், கொடிகாமம்.

★ சங்கரப்பிள்ளை ராஜலிங்கம் — மே/பா பாலசிங்கம், மட்டுவில் மேற்கு.

★ பராசக்தி கந்தசாமி — மே/பா வேலுப்பிள்ளை இராமர், நாவற்குழி தெற்கு.

★ அன்னம்மா அம்பலவாணர் — பதுமநிதி, கைதடி வடக்கு.

★ காசிப்பிள்ளை இராசதுரை — வீரபத்திரர் கோவிலடி, தச்சன்தோப்பு, கைதடி மேற்கு.

★ பஞ்சாட்சரம் ஜெயரட்ணம் — யாழ். வளாகம், இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

★ லீமா சிங்கராசா — நுணாவில் மேற்கு

★ ராமபிள்ளை நடராசா — வினாயகர் ஸ்ரோர்ஸ், இல. 185, கண்டி வீதி, சாவகச்சேரி.

★ திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம் அல்லது இராசபூபதி சபாரத்தினம் — நுணாவில் தெற்கு.

★ குணரத்தினம் ஜீவானந்தம் — மே/பா வைத்திலிங்கம், ஐயன் கோவிலடி, கண்டி வீதி, கொடிகாமம்.

★ முத்தையா இரத்தினசிங்கம் அல்லது இலங்காதேவி இரத்தினசிங்கம், 13/03, நித்தியானந்தன் வீதி, நல்லூர்.

★ சீதை மா[illegible] — மே/பா க. [illegible], மட்டுவில் கிழக்கு.

★ தம்பையா செல்லத்துரை அல்லது கண்மணி செல்லத்துரை — கச்சாய் வீதி, கொடிகாமம்.

★ சரோஜினிதேவி அற்புதானந்தராசா — மே/பா முத்துக்குமாரசாமி, மடத்தடி, கண்டி வீதி, கொடிகாமம்.

★ செ. நடராசா — நுணாவில் கிழக்கு, சங்க ஒழுங்கை.

★ செபஸ்டியன் ஜோசப்பிள்ளை — முகமாலை பாடசாலை, மிருசுவில்.

★ புஸ்பராணி ராஜேந்திரன் — மே/பா கந்தையா, குயிற்காடு, மறவன்புலோ.

★ சீனித்தம்பி திலகேந்திரராஜா — புனித நீக்கிலஸ் தேவாலயம், மிருசுவில்.

★ கதிரித்தம்பி கோபாலபிள்ளை — பெரியமாவடி ஒழுங்கை, சாவகச்சேரி.

★ G. பரமேஸ்வரி — மே/பா ப. சிவசம்பு, சங்கத்தானை.

★ கணபதி சின்னத்தம்பி — புகையிரத ஒழுங்கை, சங்கத்தானை.

★ பத்மாவதி விக்னேஸ்வரன் — குயவன் மடத்தடி, சாவகச்சேரி வடக்கு.

★ தெய்வநாயகி சாலினி, சோதிநாதன் நல்லையா — மே/பா செல்வி G. சரவணமுத்து, மதவடி ஒழுங்கை மேற்கு, சாவகச்சேரி வடக்கு.

★ ஞானபூங்கோதை சோதிநாதன் — மே/பா செல்வி G. சரவணமுத்து மதவடி ஒழுங்கை மேற்கு, சாவகச்சேரி வடக்கு.

★ தியோடா மேரி றெஜினா — தனங்கிளப்பு

★ பரமானந்து அருளானந்தம் — கச்சாய் றோட், சாவகச்சேரி.

★ அன்பு சின்னத்துரை — மே/பா கதிரவேலு, மட்டுவில் தெற்கு.

★ தம்பிராஜா சுபகிருமலர் — இல. 4, பஸ்தரிப்பிடம், சாவகச்சேரி.

★ விஸ்வலிங்கம் கண்மணி — கெற்பலி, மிருசுவில்.

★ அன்ரனிப்பிள்ளை அகஸ்ரின் — பளை மத்திய கல்லூரி, பளை.

★ லீலா இராசநாயகம் — இராசப்பர் தேவாலயம், சென் பீற்றர், புலோப்பளை கிழக்கு.

★ நாகலிங்கம் நித்தியானந்தன் அல்லது நித்தியானந்தன் ஜனகன் — கைதடி, நுணாவில்.

★ கலாவதி பொன்னுத்துரை — இந்து மகளிர் கல்லூரி, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

★ இராசசுலோசனா நாகமுத்து — இந்து மகளிர் கல்லூரி, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

★ நடேசு சுப்பிரமணியம் — தபாற் கந்தோர் ஒழுங்கை, கற்குழி, சாவகச்சேரி.

★ இராசையா கிருஷ்ணசாமி — கல்வயல்.

★ செல்லம்மா நாகராசா — கண்ணகை அம்மன் கோவிலடி, அறவழிப்பயிலகம் முன்பாக உள்ள முகாம், கைதடி.

★ செல்லையா கனகசிங்கம் — மின்சார நிலையம், சாவகச்சேரி.

★ பண்டாரம் சின்னராஜா — S. தம்பிஐயா, தாவளை, இயற்றாலை.

★ ஞானசூரி தனேந்திரன் அல்லது தனேந்திரன் — மே/பா சிதம்பரப்பிள்ளை, வரணி.

★ வி. சிதம்பரநாயகி — அல்லாரை வடக்கு.

★ கதிர்காமு பாலசுந்தரம் — மந்துவில் தெற்கு, அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

★ சரஸ்வதி துரைராஜா — மீசாலை வடக்கு.

★ விஸ்வலிங்கம் இராசாதுரை — மீசாலை வடக்கு.

★ க. சிவா — மே/பா பே. சிற்றம்பலம், மீசாலை வடக்கு.

★ சறோஜினிதேவி கந்தையா — தவசிக்குளம் முருகன் கோவிலடி, கொடிகாமம்.

★ சிவபாக்கியம் சதாசிவம் — கண்டி வீதி, கொடிகாமம்.

★ நாகன் மகாலிங்கம் — அல்லாரை.

★ சுப்பிரமணியம் பொன்னம்பலம்—மீசாலை கிழக்கு

★ தம்பிராஜா நடராஜா — அல்லாரை தெற்கு.

★ இராமநாதன் மல்லிகாதேவி அல்லது நாகலிங்கம் தம்பித்துரை — அல்லாரை தெற்கு.

★ க. சிவசக்தி சண்முகம் — மீசாலை தெற்கு.

★ பத்மினி சுப்பிரமணியம் — பழைய புகையிரத நிலைய வீதி, மீசாலை.

★ தம்பிமுத்து நல்லைநாதன் -- புத்தூர் சந்திக்கு அருகாமை, மீசாலை.

★ சின்னத்தம்பி இராமலிங்கம் — மே/பா சின்னையா சுப்பிரமணியம், மீசாலை மேற்கு.

★ ஆறுமுகம் கந்தையா— மே/பா முத்து சிவசோதி, கேணியடி வீதி, மீசாலை.

★ அந்தோனிப்பிள்ளை இருதயநேசன் — மே/பா திருமதி சிவராசா விஜயவயற்கரை ஒழுங்கை, மீசாலை மேற்கு.

★ சரசவதனி அருணகிரிநாதன்—பழைய புகையிரத நிலைய வீதி, மீசாலை.

★ தியாகராசா மஞ்சுளா — இல 6, கதிரைவேலு வீதி, அரியாலை.

★ செல்லப்பா இராசரத்தினம் — சேச்லேன் முன் ஒழுங்கை, உசன்.

(இ)

## அதிபர்களின் அதிகரித்த சம்பளத்தை வழங்க முடிவு

கொழும்பு, ஏப். 3

பாடசாலை அதிபர்களுக்கு ஆசிரிய சேவைத் திட்டத்துக்கமைந்த சம்பளங்களை உடனடியாக வழங்க கல்வி, உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக மாகாண கல்வி அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்று அமைச்சின் மேலதிக செயலாளர் உபசேன சேனநாயக்க தெரிவித்தார்.

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக பாடசாலை அதிபர்களுக்கு புதிய திட்டத்தின் கீழ் சம்பளங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

எனினும் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்படவேண்டிய சம்பளமே உடனடியாகக் கொடுக்கப்படும்.

கடந்த வருட நிலுவைகள் பின்பு வழங்கப்படும் என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்குச் சீட்டுக்கு பதிலாக வாக்குப் புத்தகம்

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் பெரியார் மாவட்டம் — மொடக் குறிச்சித் தொகுதியில் போட்டியிடுவதற்கு நேற்றுவரை ஆயிரத்து 47 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கான இறுதித் தினம் இன்றாகும்.

இந்த அளவு எண்ணிக்கையில் வேட்பாளர்கள் போட்டியிட்டால் இத் தொகுதியில் வாக்குச் சீட்டுக்குப் பதிலாக வாக்குப் புத்தகம் அச்சடிக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மூப்பனார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மு. க. செயலாளர் க. அன்பழகன் துறைமுகம் தொகுதியிலும் சட்டப் பேரவைக்கு வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா தமது முன்னைய தொகுதியான பர்கூரில் வேட்புமனு சமர்ப்பித்திருக்கின்றார்.

இதேசமயம் —

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரு தொகுதிகளில் போட்டியிடுகின்றார். ஆந்திர மாநிலத்தில் நந்தியால் தொகுதியிலும், ஒரிஸா மாநிலத்தில் பர் ஹாப்பூர் தொகுதியிலும் அவர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். (உ)

## மாணவருக்கான கண்ணாடிகள்

பார்வை குறைவென கண்ணாடிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு வழக்குவதற்கு 50 மூக்குக் கண்ணாடிகள் தயாராகவுள்ளன என்று கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

கண்ணாடி பெற விண்ணப்பித்த பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தும் கடிதத்தை பெற்று எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9 மணிக்து கல்வித்திணைக்கள களஞ்சியக் கிளையில் கண்ணாடியைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## தணிக்கையை கண்டித்து அறிக்கை

''ஆட்டிக்கல் - 19'' என அழைக்கப்படும் தணிக்கைக்கு எதிரான சர்வதேச நிலையம் உள்ளூர் செய்திகளை ஸ்ரீலங்கா அரசு கடந்த செப்ரெம்பர் — டிசம்பர் காலத்தில் தணிக்கை செய்ததைக் கண்டித்து அறிக்கை விட்டுள்ளது. (இ-6-7)

## கை துண்டிப்பு

நெல் குற்றும் ஆலையில் கடமையாற்றிய இளைஞர் ஒருவர் இயந்திரத்துக்குள் சிக்கி வலது கை முழங்கைக்குக் கீழ் துண்டிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பெரும்குளம் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இளவாலையில் இருந்து இடம்பெயர்ந்து கற்குழியில் வசித்து வந்த ஆனந்தர் பத்மராசா (வயது 17) என்பவரே கையை இழந்தவர் ஆவார். (இ-13)

## அவசரகாலச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியன தேர்தலில் அரசுக்குப் பாதகமான விளைகளை ஏற்படுத்தும் என அரசுக்கு ஆதரவான அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை அங்கீகரிக்கக் கோரி 05-02-96இல் தேர்தல் ஆணையாளரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதம் குறித்து பல முறை நினைவூட்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவஸர அந்த நிதி ஜனாதிபதியினால் அங்கீகரிக்கப்படவில்லை என்றும் ''லக்பிம'' தெரிவிக்கிறது. (இ-10)

## வலிகாமம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதே சமயம் நேற்று முன் தினம் வலிகாமத்தில் இடம்பெற்ற இரு மோதல்களில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று ராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 11 மணி அளவில் வலிகாமத்தில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும்—

அதே தினம் இரவு 11. 30 மணி அளவில் பண்டத்தரிப்புக்குச் சமீபமாக இடம்பெற்ற இரு மோதல்களில் மற்றும் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

## உயிரிழந்தோர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்களின் எண்ணிக்கை 54 ஆக உயர்ந்திருக்கின்றது.

இந்தத் தாக்குதலின் போது படையினரின் ரோந்து அணி கூண்டோடு அழிக்கப்பட்டதும் —

நாற்பது படையினர் உயிரிழந்ததாக அப்போது அறிவிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த மேலும் 14 படையினர் பின்னர் உயிரிழந்ததாக ''சண்டே ரைம்ஸ்'' பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்திருக்கின்றார். [உ]

## அதிபர்களின்..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் சுமார் 16 ஆயிரம் பாடசாலை அதிபர் நன்மை அடைய உள்ளனர்.

அதிபர்களுக்கு அதிகரித்த சம்பளம் வழங்கப்படுவதால் வருடத்துக்கு 20 கோடி 40 லட்சம் ரூபா மேலதிக செலவாகிறது. (இ-3)

# தபாலகம் நேற்று முதல் புதிய இடத்தில் இயங்குகிறது!

யாழ். பிரதம தபால் நிலையம் புதிய இடத்தில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது.

இந்தத் தபால் நிலையம் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள கராஜ் ஒன்றில் இயங்க ஆரம்பித்தபோதும், தபால் விநியோக வேலைகளை ஆரம்பிக்க ஓரிரு தினங்கள் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை பிரதம தபாலகத்தின் அலுவலகம் மகளிர் கல்லூரியிலேயே தொடர்ந்து இயங்கும், (இ-3)

# நீண்ட நாள்களுக்குப் பின் நோயாளர் கப்பல் சேவை

சாவகச்சேரி, ஏப். 3

கொழும்புக்கு மேலதிக சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்களுக்கான பரீட்சார்த்த கப்பல் சேவை நாளை நடைபெறவிருக்கிறது.

நோயாளர் சேவையை நடத்தவென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''ஹபரண'' கப்பலில் நோயாளர் சேவையை நடத்த அரசு அனுமதி வழங்காததால் இச்சேவை கடந்த காலங்களில் தடைப்பட்டிருந்தது.

தற்போது இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாற்பது நோயாளர்கள் செல்லக் கூடிய வசதிகள் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கப்பலில் பரீட்சார்த்தமாக நாளை மேற்கொள்ளப்படவிருக்கும் சேவையில் 8 பேரே செல்கிறார்கள்.

இக்கப்பலில் செல்ல பெயரை பதிவு செய்த நோயாளர்களையும், அவர்களுக்கு உதவியாக செல்வோரையும் நாளை காலை 11.30க்கு இரண்டு நாள்களுக்கு தேவையான உணவு மற்றும் அடையாள அட்டை, வைத்திய நிபுணர் சிபார்சுக் கடிதம், ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றுடன்—

மந்திகையில் உள்ள யாழ். ஆஸ்பத்திரிக்கு சமூகமளிக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் செல்வி என். கனகரத்தினம் கேட்டுள்ளார். (இ-3-15-173)


## தர்மிசா ரவல்ஸ்

படுக்கை நோயாளிகள் தொடர்பாக விளக்கங்களை கோரியோர் இன்று காலை 10 மணிக்கு சந்திக்கவும்.

(41326)



## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. Road, Kokuvil.

தென்மராட்சியில்

இடம்:- மீசாலை சந்தியில் இருந்து அல்லாரை வீதியில் 100 யார் தூரத்தில்

வடமராட்சியில்

இடம்:- Beacon Study Centre

### O/L DAY CLASS

| | |
|---|---|
| கணிதம் | — இரா. அருட்செல்வம் |
| விஞ்ஞானம் | — இரா. செல்வவடிவேல் |
| தமிழ் / சமயம் | — ஞான. திருக்கேதீஸ்வரன் / தர்மா |
| ஆங்கிலம் | — சந்திரமௌலி |
| சமூகக்கல்வி | — I. புவனேந்திரன், இ. நித்தியானந்தன் |
| வர்த்தகம் | — K. சிறீஸ்குமார், K. மகேஸ்வரன் |

குறிப்பு: அனுமதிகள் வழங்கப்படுகின்றன

ஆரம்பம்: 07-04-1996 முதல்

நேரம்: காலை 8-00மணி

(சி-1298)


## நினைவு அஞ்சலி

### அமரர் சி. பற்குணம் அவர்கள்

மக்கள் சேவையே மகோன்னத சேவை என எண்ணி கடமையே கடவுள் எனக் கருதிய வடக்கு, கிழக்கு மாகாண மேலதிக பிரதம செயலாளரும், மூத்த நிர்வாக சேவை உறுப்பினரும், தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அமரர் சி. பற்குணம் அவர்களின் மறைவு தமிழீழ மக்களுக்கு மட்டுமன்றி அரச ஊழியர்களுக்கும் பாரிய இழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

தென்மராட்சிப் பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
(2 - 4 - 96)

(41323)

## மரண அறிவித்தல்கள்

### மனோன்மணி தாமோதரம்பிள்ளை

கரவெட்டி மேற்கை சேர்ந்த காலஞ்சென்ற சி. தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய பொது முகாமையாளர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்) அவர்களின் அன்பு மனைவி திருமதி மனோன்மணி தாமோதரம்பிள்ளை (02-04-96) அன்று இறைபதமடைந்தார்.

இவர் சிவகுமாரன், திருக்குமாரன் (கனடா), வைத்தியகலாநிதி சூரியகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சி. மேகலா (ஆசிரியை) அவர்களின் அன்பு மாமியாரும், சுபநீலாவின் அன்பு பேத்தியாரும், காலஞ்சென்ற வே. பாலசிங்கம், வே. மகேசன் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற Dr. சி. வல்லிபுரம், திருமதி பா. நெய்வானை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 3- 4- 96 (புதன்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் அவரது கரவெட்டி இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்குமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
வைத்தியகலாநிதி தா. சூரியகுமாரன் (மகன்)
சரஸ்வதி வாசா,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி,

(சி/4160)

### சி. பற்குணம்

(B. A (Hons) S L A S Class I)

மந்துவிலைச் சேர்ந்தவரும், வடக்கு, கிழக்கு மாகாண சபையின் மேலதிக பிரதம செயலாளரும், கைத்தொழிற் பணிப்பாளருமாகிய சி. பற்குணம் 01 - 04 - 96 இல் தமிழ் நாட்டில் காலமானார்.

அன்னார் மனோன்மணி (தொலைக்கல்விப் போதனாசிரியை, திருகோணமலை)யின் அன்புக் கணவரும், அபிராமி (சென் மேரிஸ் கல்லூரி திருகோணமலை), அனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. யோகசிங்கம் (அதிபர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), வேலையா (கணக்கு லிகிதர்), இரத்தினசிங்கம் (உதவி முகாமையாளர் தெ. ப. உ. வி. சங்கம்), வீரசிங்கம் (கிராம சேவகர் கண்டாவளை), சிவபாதசுந்தரம் (பிரதம லிகிதர் ரெலிகொம் திருகோணமலை), விஜயபாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராதா (ஆசிரியை குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை), பாலேந்திரா (பிரான்ஸ்), சத்தியேந்திரா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சுபத்திரா (கொழும்புப் பல்கலைக்கழகம்), உருத்திரா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கேதீஸ்வரி, யசோதரா, சத்தியபாமா, லோகேந்திரா, தர்மேந்திரா, அபிரா, பிரியதர்சினி, மீரா, ரம்மியதர்சன், சந்திரா, ஜெசி, பிளெஸ்ஸோ, கோசலா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 04 - 04 - 96 வியாழக்கிழமை பி. ப. 3.00 மணியளவில் திருமலையில் உள் துறைமுக வீதியிலுள்ள அவரது உத்தியோக வாசஸ்தலத்தில் நடைபெறும்.

தகவல்:
சி. யோகசிங்கம் (சகோதரன்)

மந்துவில்,
கொடிகாமம்.

(41322)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 03-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org